உ

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
# Kokuvil Hindu College Old Students Association - Canada
## கல்விசார் போட்டி – Educational Contest

## ஆண்டு 2019 – Year 2019

## பேச்சு
## Speech

**பிரிவு:- 12 வயதுக்குட்பட்டோர்** **Age Group :- Under 12**

## திரேசா அம்மையார்

பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்தோருள் திரேசா அம்மையார் முதன்மை ஆனவர். 1910ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் நாள் மசிடோனியா நாட்டில் பிறந்தார். அவர் 70 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து ஏழை மக்களுக்கு தொண்டாற்றினார்.

அம்மையார் தனது 17வது வயதில் தொண்டு செய்ய விரும்யி உரோமன் கத்தோலிக்க மடத்தில் சேர்ந்தார். அயர்லாந்திலும் பின்னர் இந்தியாவிலும் பயிற்சி பெற்றார். அன்பு, நற்பண்பு, கடமை, கட்டுப்பாடு, தொண்டு முதலியவை பற்றி கற்றுத் தெளிந்தார்.

1946ல் அம்மையார் கல்கத்தாவில் உரோமன் கத்தோலிக்க உயர்பாடசாலையில் அதிபராகக் கடமை புரிந்தார். ஏழைமக்கள் படும் துயரைக் கண்டு மனம் கலங்கினார். ஏழைச் சிறுவர்களுக்காகப் பாடசாலைகளை நிறுவினார். அம்மையாரின் அன்பும், அறிவுரையும் மக்களை வியக்க வைத்தன. 1950ல் ''மிஷனறி ஒவ் கிறிஸ்ரி'' எனும் திருச்சபையை ஸ்தாபித்து நோய், ஏழ்மை, பட்டினியில் வாடும் மக்களுக்குத் தொண்டாற்றிவந்தார். இவரால் உருவாக்கப்பட்ட இத்திருச்சபை 2012ம் ஆண்டு கணிப்பின்படி 610 திருச்சபைகளாக 4500 கன்னியாஸ்திரிகளைக் கொண்டு 133 நாடுகளில் இயங்கி வருகின்றது. இவரை உலக மக்கள் மதர் திரேசா என அழைக்கின்றனர்.

இவருக்கு 1979ல் அமைதிப் பணிக்கான ''நோபல் பரிசு'' வழங்கப்பட்டது. அம்மையார் 1997ம் ஆண்டு செப்ரம்பர் 5ம் நாள் இறையடி சேர்ந்தார். செய்தொண்டு சிறிதே ஆயினும் அதை தூய அன்புடன் செய்ய வேண்டும் என்பதே அம்மையாரின் கோட்பாடாகும். நாமும் அம்மையாரின் வழி நின்று நம் தாய்மண்ணில் வாழும் போரினால் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு உதவிடப் பெற்றோரை ஊக்குவிப்போமாக.

குறிப்பு: பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் …….

**மனனம்** - 40 புள்ளிகள், **உச்சரிப்பு** – 20, நிற்கும் நிலை - 30 புள்ளிகள், **தொனி** - 20 புள்ளிகள்